In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.49/2021 | Prosecution witness P.W.6 |
| Name: Kannan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 21-01-2025.

**(Accused present.)**

முதல் விசாரணை :-

நான் கொடைரோட்டில் மெக்கானிக் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். 17.05.2020ம் தேதி இரவு சுமார் 10-11 மணியளவில் நான் என் வீட்டில் இருக்கும்போது சத்தம் கேட்டது. என் வீட்டிற்கு எதிர்த்தார்போல் பாலாஜி ஓட்டல் அருகே சத்தம் கேட்டது. நான் போய் பார்த்தேன். அந்த இடத்தில் போலீசார் இருந்தனர். பாண்டி, கார்த்தி ஆகியோர் இருந்தனர். ராம்குமார், செந்தில்குமார் ஆகியோரும் இருந்தனர். அப்போது போலீசார் ராம்குமாரை விசாரித்தனர். அப்போது ராம்குமார் ராஜாவை கொலை செய்ததை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். அதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். பின்னர் ராம்குமார் கிளப்பில் இருந்து கத்தியையும், உடைந்த பாட்டிலையும் எடுத்து கொடுத்ததை போலீசார் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி அன்றைய தினம் எதிரி ராம்குமார் ஆஜர் செய்ததுதான். எதிரி கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நானும், ராமலிங்கமும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.3. பொருட்கள் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அதசாஆ.4. ஜீப்பில் எதிரியையும்

கைப்பற்றிய பொருட்களையும் போலீசார் எடுத்துச் சென்றார்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

நான் கையெழுத்துப்போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை படித்துப் பார்த்தேனா என்றால் ராம்குமார் சம்பவம் நடந்தை பற்றி சொல்லியிருந்தார். வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட சமயத்தில் 10, 20 பேர் இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். நான் சொன்னமாதிரி என் முன்னிலையில் எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நான் காவல் நிலையத்திற்கு சென்று கையெழுத்து மட்டும் போட்டேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.21 16:06:06 +0530

Principal District Judge,
Dindigul.